# பின்னிணைப்பு

(1) ரெம்பரா : ஓவியம் வரையும் உலர்சுதை நுட்பமுறை (பிரெஸ்கோ சிக்கோ)

(2) கியூரஸ் கியூரோ(Chiaros Curo) : ஐரோப்பிய சித்திரப்பாணியில் உள்ள ஒளிநிழல் பண்பு

(3) கியூபிஸம் : கேத்திர கணித உருக்களால் ஓவியத்தைப் படைக்கும் ஓவியப்பாணி (பிக்காசோபின் ஓவியப்பாணி)

(4) கைரோகிளிப்ஸ் : எகிப்தியர்களின் சித்திர எழுத்து வடிவம்.(பறவை வேட்டை ஓவியத்தில்)

(5) சக்கபொறுவ(வனைசில்லு) : மட்பாண்டக் கலைஞர்கள் பயன்படுத்துகின்ற உபகரணம்.

(6) கோபுரம்: இந்து ஆலய கட்டத்தின் உயர்ந்து காணப்படும் பகுதி.

(7) மியூரல் : சுவரில் சிறுபுடைப்புச் சிற்பமாக அமைக்கப்படுவது.

(8) கு.்.பா: பள்ளிவாசலின் கட்டத்திற்கு மேலே பிறையைத் தாங்கி நிற்கும் பகுதி (கும்மட்டம்)

(9) வர்ணபலம் : ஒரு வர்ணத்தின் கடும் தன்மையும் மென் தன்மையும்.

(10) ரத்வத்த: உள்நாட்டுக் கைத் தொழிலான பாய் பின்னல் வேலையில் பயன்படும் அலங்காரம்

(11) சமபங்கநிலை: நிமிர்ந்து நேராக நிற்கும் நிலை

(12) அல்பனா: விளக்கை நடுவில் வைத்து நிலத்தில் வரையும் கோலம்

(13) வர்த்தனா : மனித உருவங்களில் உள்ள உடலுறுப்புக்களில் திரட்சியைக் காட்டுதல் வர்த்தனா எனப்படும்.

(14) யத்தி பொறுவ: சிங்கள மாணவர் ஓவியம் வரையப் பயன்படுத்தப்படும் பலகை

(15) லிதோ அச்சுமுறை: பல வர்ணங்களில் பல பிரதிகளைப் பெறும் முறையாகும்

(16) ரெம்பிளேற்: பஸ்ரல் ஊடகத்தைக் கொண்டு உள்ளம் புறமும் அச்சுப்பதிப்பு செய்யக் கூடிய உடுவரைத் தகடு

(17) வர்ண பேதம்: ஒருவர்ணத்தின் பல வேறுபட்ட சாயல்கள்

(18) குறுளுகலாவ : பறவை, மிருகம் ஆகிய உருவங்களால் அலங்கரிக்கபட்ட பாய்

(19) மடல்குரும்பாவ : எம்பக்கே தேவாலயத்தில் காணப்படும் கூரை அமைப்பு

(20) அல்ராமீரா : ஸ்பானியாவில் உள்ள புராதன (கற்கால) ஓவியங்கள் கொண்ட குகை

(21) விஜயலதா(மின்னல்): சிகிரியாவில் உள்ள பொன்னிற பெண் வடிவங்களை மின்னல்பெண் என பரணவிதான கூறுகின்றார்.

(22) குறுக்கு சட்டத்தூண் செதுக்கல்(உடலிபத்): சாஞ்சி தோரணத்தில் காணப்படுகின்ற தூண் அமைப்பு

(23) டெராக்கொட்டா: சுடுமண்ணினால் ஆக்கப்படும் சிற்பங்கள் (உ-ம் கொழும்பு றோயல் கல்லூரியின் நவரங்கலா மண்டபச் செதுக்கல்கள்)

(24) கஜசிங்கம்: யானைத் தலையும் சிங்க உடலும் கொண்ட கற்பனை வடிவம்.

(25) சிறுபுடைப்பு: தளத்தில் இருந்து சற்றுக் கீழாக செதுக்கப்பட்டிருத்தல்.

(உ-ம் எம்பக்கே சிற்பங்கள்)

(26) கின்னரர் : பாய்பின்னல் தொழிலில் ஈடுபடும் கலைஞர்கள்.

(27) சித்திராவலிய : தொடர் சித்திர முறை (கண்டியகால ஓவியமுறை)

(28) வேற்கலைஞர் : அரக்கு வேலையில் ஈடுபடும் கலைஞர்கள்.

(29) சாதிலிங்கம் : சிவப்பு வர்ணத்தினைப் பெறுவதற்காக புராதன கலைஞர்கள்

(30) தொரண எண்ணெய் : சித்திரம் பளபளப்பாகவும் பூச்சிகளிலிலருந்து பாதுகாக்கவும் பூசப்படும் எண்ணெய்.(வலிச்சி)

(31) பின்னறமலர்: எம்பக்கே தேவாலயத்தில் காணப்படும் நான்கு இதழ் கொண்ட செதுக்கல்.

(32) சித்தரர் : முகமூடி வேலைப்பாட்டில் ஈடுபடும் கலைஞர்கள்.

(33) தூரதரிசனம்: உருவம் ஒன்று அண்மையில் இருக்கும் போது பெரிதாகவும் தூரத்தில் இருக்கும் போது சிறிதாகவும் தென்படுவது. (உ-ம் மின்கம்பவரிசை, வீதி)

(34) கோலம்: வீட்டு முற்றத்தில் இடப்படும் அலங்காரம். (உ-ம் தைப்பொங்கல்)

(35) முப்பரிமானம்: ஓவியம், சிற்பம் ஆகியவற்றில் நீளம், அகலம், உயரம் என்பவற்றுடன் திரட்சித் தன்மையும் காணப்படல்.

(36) ஸ்கிறைப்: எகிப்திய எழுத்தாளன் சிலை

(37) ஸ்பிங்ஸ்: மனித தலையும் சிங்க உடலும் கொண்ட கற்சிற்பம்

(38) திரிபங்க நிலை: (தலை, இடுப்பு, கால்) மூன்று இடங்களில் வளைவுகளுடன் நிற்கும் சிற்பங்கள், ஓவியங்களின் நிலை

(39) கலிகிரபி: இஸ்லாமிய எழுத்தணி அலங்காரம்

(40) பூமிபரிச முத்திரை: சித்தார்தர் ஞானம் பெற்ற சந்தர்ப்பத்தை காட்டுவதற்கு சிற்பிகள் பயன்படுத்தும் முத்திரை

(41) பத்திரிப்புவ: தலதா மாளிகையில் உள்ள எண்கோண மண்டபம்

(42) விஜயஉத்பாய கடலாதெனிய விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள கட்டிடம்

(43) மினார்: இஸ்லாமிய பள்ளிவாசலில் இரு புறமும் உயர்ந்து நிற்கும் தூண்

(44) வகதெக: சிங்கள சித்திர ஆசிரியர்கள் தனது மாணவனுக்கு முதன்முதலாக வரைந்து காட்டும் அடிப்படை அலகு

(45) சந்தர்மதிலக: கம்பளைக் காலத்தில் 4ம் புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்ட கடலாதெனிய விகாரையின் மறுபெயர்

(46) நவநாரிக்குஞ்சரம்: ஒன்பது பெண்கள் அடங்கிய யானை வடிவ கண்டியக்கால கற்பனைச் சித்திரம்

(47) வட்டதாகே: சிறிய தாதுகோபங்களை முழுமையாக பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட வட்டவடிவமான கட்டிடம்

(48) விமானம் : இந்துக் கோயிலில் கர்ப்பக் கிரகத்தின் மேல் கலசத்தோடு இருக்கும் கோபுரம் போன்ற அமைப்பு